OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
1 MAY 1912
MADRAS

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வராள்

அஷ்டோத்திரங்களும்

அறுபத்திநாலு திருவிளையாடல்களும்

# அடங்கிய லாலி

---

தஞ்சாவூர் மகா-ா-ா-ஸ்ரீ N. கிருஷ்ணசாமி நாயுடு
கார் அவர்களால் இயற்றப்பட்டு

மதுரை பாண்டியன் பிரஸ் புரொப்ரைட்டர்
மகா-ா-ா-ஸ்ரீ மு. அனந்தகிருஷ்ண நாயுடுகாரவர்
களால் பிரசுரம் செய்யப்பட்டது.

மதுரை

கலியுகம் ௫௲௰௩க்கு மேல் நிகழாநின்ற
விரோதிகிருது ௵ மார்கழிமாதம்.

பாண்டியன் பிரஸ், மதுரை—1912.

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வராள்

அஷ்டோத்திரங்களும்

அறுபத்திநாலு திருவிளையாடல்களும்

# அடங்கிய லாலி

---

தஞ்சாவூர் மகா ரா-ரா-ஸ்ரீ N. கிருஷ்ணசாமி நாயுடு
காரு அவர்களால் இயற்றப்பட்டு

மதுரை பாண்டியன் பிரஸ் புரொப்ரைட்டர்
மகா-ரா-ரா-ஸ்ரீ மு. அனந்தகிருஷ்ண நாயுடுகாரவர்
களால் பிரசுரம் செய்யப்பட்டது.

மதுரை

கலியுகம் ௫௲௰௩க்கு மேல் நிகழாநின்ற
விரோதிகிருது வருஷ மார்கழிமாதம்.

Q23:417. 21195
N12
5.93
294.551
85718

MADRAS

உ

# மகான்களுடைய ஸ்துதி.

---

## விருத்தம்.

காரணத்தி லொன்றாயும் அவ்யக்தமாயும்
காரியத்திற் பலவாயும் வ்யக்தமாயும்
ஆரணத்தின் பொருள்வடி வானந்தமாயும்
அன்பர்களுக் கபரோக்ஷ ஞானமாயும்
பூரணமாய் விளங்கிநிற்கும் பூதநாத
புண்ணியஸ்ரீ பாலைய்ய புநிதானந்த
நாரணனே நான்மறைகள் போற்றுந்தேவ
நாயகநின் னளினமலர்ப் பதங்கள் போற்றி.

MADRAS



விநாயகர் ஸ்துதி.

ராகம்—யமுனு கல்யாணி.

ஆதிவிநாயக அன்பர் சகாய அரிமருகா போற்றி
போதாயனர்முதல் மாதவர் போற்றும் ஸ்ரீ புங்கவனே
[போற்றி
ஜோதி சொரூப சுந்தரானந்த சுரதேவா போற்றி
தீதறவெம்மைத் திணி* தனில்காக்கும் தினகரனே
[போற்றி

# ஸ்ரீ மீனுக்ஷி அஷ்டோத்தரம்.

1. மங்களகுணகரி மாமந்திரரூபி
சங்கரி மனேன்மணி சாம்பவிசரணம் (5)

2. சந்திர மௌளீஸ்வரி சக்திசாவித்திரீ
இந்திரை பகவதி ஈஸ்வரி சரணம் (6)

3. அகிலாண்டநாயகி ஆரியை கவுரீ
முகில்வண்ண சோதரி முக்கண்ணி சரணம் (5)

4. ஆரணி பூரணி அம்மை ஐராணி
நாரணி காரணி நாயகி சரணம் (7)

---

* பூமி

5. மரகத வல்லிசிவை மகிடசம்ஹாரி
நிரஞ்சனி மகேஸ்வரி நிரந்தரி சரணம் (6)

6. ஐங்கரஜனனி ஸ்ரீ ஆனந்தரூபி
பங்கஜ தளாக்ஷி ஸ்ரீ பார்வதி சரணம் (4)

7. சாமகானப்பிரியே சச்சிதானந்தி
காமகோடிலலிதை கமலாக்ஷி சரணம் (5)

8. ராஜராஜேஸ்வரி ரஞ்சனி வராகி
கேசவ சோதரி கெண்டகி சரணம் (5)

9. தர்மசம்வர்த்தனி தரணி பூதேவி
நர்மதை காவேரி நாமகள் சரணம் (6)

10. சம்பக வல்லிஸ்ரீ ஜாங்நவி பவானி
நிம்பக தேவிஸ்ரீ நீலாக்ஷி சரணம் (5)

11. கமலேகாமேஸ்வரி காமாக்ஷி பாலே
அமலே அஷ்டாக்ஷரி அம்பிகை சரணம் (7)

12. துவாதசாக்ஷரி சிலேதுந்துமி மாதங்கி
சிவானந்தி ஸ்ரீதேவி சிற்சக்தி சரணம் (7)

13. பின்னேபீஜாக்ஷரி பிராட்டி வைதேகி
அன்னே ஜகரக்ஷகி அபிராமி சரணம் (7)

MADRAS

14. ஆதிபஞ்சாக்ஷரி ஆனந்தவல்லி
ஜோதி ஜ்வாலாமுகி சுந்தரி சரணம் (4)

15. சாரதே சடாக்ஷரி ஷண்முகி கபாலி
பாரதி பைரவி பார்கவி சரணம் (7)

16. தற்பரை தயாநிதி தடாதகை மீனாக்ஷி
கற்பக ரூபிஸ்ரீ கல்யாணி சரணம் (6)

17. சண்டிகை சாமுண்டி சமரி சார்தூலி
மண்டலேஸ்வரி முதல்வி மாதேவி சரணம் (7)

18. மாரி குண்டலி சூலி மாதவி ஸ்ரீதுர்கை
வீரி விஜையை விமலை விஸ்வேசி சரணம் (9)

## சிவாஷ்டோத்தரம்.

1. சந்திர மௌளீஸ்வரா சச்சிதானந்தா
சுந்தரேஸ்வர சம்போ சுத்தனே சரணம் (5)

2 வெள்ளியங்கிரீசா வேதாந்த ரூபா
வள்ளலே நடராஜ வரதனே சரணம் (5)

3. பஞ்சாக்ஷர சொரூப பார்வதி சமேதா
பஞ்ச பூதநாதா பரமனே சரணம் (4)

4. ஆரணா காரணா அகிலாண்ட நாதா
பூரணா புங்கவா புனிதனே சரணம் (6)

5. ஆலமற்கடவுளே அமிருத சொரூபா
நீலகண்டா நிமில நிடிலாக்ஷ சரணம் (5)

6. சிதம்பரதேவஸ்ரீ சிவகாமி நேயா
சதுர்மறைப்பொருளே ஸ்ரீ சங்கரா சரணம் (5)

7. பரப்பிர்ம்ம பசுபதி பரதேவ ருத்ரா
அரஹர உமாபதி ஆதியே சரணம் (7)

8. காமஹாரி கரிய கண்ணுதல் கபாலி
சோமசேகரமுக்கண் சோதியே சரணம் (7)

9. பரம்பணி மார்ப ஸ்ரீ பார்வதி காந்தா
சாம்பவ சதாசிவ ஜல்பேச சரணம் (5)

10. கங்கைவேணிய யோகி கைலாச நாதா
மங்கையிட பாகனே மாதேவ சரணம் (5)

11. குன்றைவில்லி விமல குருதேவ தேவா
கொன்றை சூடிய நந்தி கோமானே சரணம் (6)

12. ஈசான ஈஸ்வர இன்ப ஸ்வரூபா
நேசா நிரஞ்சன நிரந்தரா சரணம் (6)

13. திருநேத்ர திரிசூல திரிபுராந் தகதாணு
சர்வேஸ சர்வக்ய ஜகநாத சரணம் (7)

14. கர்த்தனே காருண்ய கருணை ப்ரவாகா
அர்த்தநாரீஸ்வரா அண்ணலே சரணம் (5)

15. அத்தனே அதிகுண ஆனந்த ரூபா
முத்தனே மகேஸ்வரா முதல்வனே சரணம் (6)

16. பிறப்பிலி பிறைசூடி பிஞ்ஞக பீமா
அறுகுண வரதபய அன்தனே சரணம் (6)

17. வாமதேவா ரிஷப வாகன கிரீசா
சாமகானப்பிரிய சாந்தனே சரணம் (5)

18. அசரீர அத்வைத அக்ஷய அகண்டா
சசிதர ஷாட்குண்ய ஜகதீச சரணம (7)

19. பக்த இருதய வாச பாபவிநாசா
நித்யவானந்தசிவ நிர்மலா சரணம் (6)

---

## அறுபத்திநாலு திருவிளையாடல் லாலி.

1. ஆதிகாரணவரத ஆலவாயமர்ந்த
ஜோதிஸ்ரீ மீனாக்ஷி சுந்தரர போற்றி.

2. துவாத சாந்தங்கடந்து துரியநிலே மேவும்
பவானியுடன்மகிழ்ந்தருளும் பராபரப்பொருளே

3. மூர்த்திஸ்தல தீர்த்தத்தால் முக்திநிலேகாட்டி
வார்த்தைக் கதீதமதை வழங்கிய தேவா.

4. விருத்திரதோடம் நீங்க விண்ணவர் கோன்வந்து
கருணைபெற பூஜித்த கடம்பவன நாதா. 1

5. அருந்தவன்* சாபமெனும் அம்பினால் நொந்து
வருந்திய கஜபதியை வாழ்வித்த தேவா. 2

6. குலசேகரன்கண்ட கூடலெனும் தெய்வ
நிலனகர் செய்வித்த நிர்மல சொரூபா. 3

7. மலயத்துவஜன் செய்த மகந்தனில் வந்த
மலைமகள் தனையடைந்த மாமந்திரரூபா 4-5

8. பள்ள மாயையை நீத்த பாம்புபுலி காணும்
வெள்ளி யம்பல கூத்த வேதாந்த ரூபா. 6

9. குண்டோதரன்பசி குறைதீர அன்னம்
அண்டர்நதி வைகையை யளித்த மதுரேசா. 7-8

10. கடலேழில் கணவனுடன் காஞ்சனமாலை
இடமிருந்து மூழ்கிவர இயற்றிய விஸ்வேசா. 9-10

11. தக்கன் மகன் சிதைத்தோனை தடாதகை வயிற்றில்
உக்கிர குமரனென உதவிய கிரீசா. 11

12. உக்கிரகுமாரனுக் குகந்து வளைவேலும்
சக்ரிமுடி செண்டுடன் தந்த மதுரேசா. 12

---

* தூர்வாஸர்

Q23·4
N12

13. கடல்சுவர வேல்விடுத்து கற்பக வேந்தன்
முடிசிதற வளையெறிந்த மூவுல கேந்திரா. 13-14

14. மேருவை செண்டாலடித்து மேதினிய ரல்கல் 15
தீர வைப்பெடுத் தீந்த திருநேத்திர தேவா.

15 அருமறைக்குப் பொருளுரைக்க அருந்தவர் முன் [வந்து
பெருமையுட னருள்செய்த பிரணவ சொரூபா. 16

16. அபிஷேக பாண்டியனுக் கணிமகுடம் செய்ய
சுபம் விளைக்கும் மணிஈந்த சுரராஜ தேவா. 17

17. கடல் மாரியால் வந்த கலவரத்தைத் தீர்த்து
மடமையற வருணனை மகிழ்வித்த நாதா. 18-19

18. வல்லர் சித்தர்போன்ற வடிவு கொண்டுவந்து
கல்லானை கரும்பருந்த காட்டும் ஜெகதீசா. 20-21

85718

19. அமணர்க ளேவிய யானையை யெய்த
அமிர்த சொரூப ஸ்ரீ அகிலாண்ட நாதா. 22

20. விருத்த குமரபால வேடங்கள் தாங்கி
கருணையுடன் கௌரியை காத்த மதுரேசா. 23

21. மால்ராஜ சேகரன் மனமகிழ்ந்து போற்ற
கால் மாறி யாடிய கைலாச நாதா. 24

22. மாதுபழிக் கஞ்சிய மன்னவனைத் தேற்றி
தீதன்மகா பாதகத்தைத் தீர்த்த நிடிலாக்ஷா 25-26

23. ஆசிரியன் மனைவிமிசை ஆசைகொளு மெய்யை
வீசும் வாளைக்கொண்டு வெட்டிய மகேசா. 27

24 பாவி சமணர் ஏவும் பாம்பையும் மாய
ஆவையும் போக்கிய அமிருத சொரூபா. 28-29

25. சாமந்தனைக் காக்க சமர்வீரர் போல
கோயகன் முன்வந்த கொன்றையணி மார்பா. 30

26. குலபூடணன் க்ஷாம குறையால் வருந்த
உலவாத கிழியீந்த உபமன்ய தேவா. 31

27. வணிகர்குல வனிதயரை வளைபூணத் தீண்டி
அணிமாதி யறுவர்க்கும் அருளும் காருண்யா. 32-33

28. காடுவெட்டிச்சோழன் கண்டு களிகூற
ஈடிலாக்குறியிட்ட இகபர தேவா. 34

29. தென்னவன் படைகளைத் தெண்ணீரால் காத்து
பொன்னனைக் கிரசவாதம் புகன்ற ஜெகதீசா. 35-36

30. ஜலத்தில்விழ செப்பியனை சாய்த்தடிகள் போற்ற
உலவாத கோட்டையை உதவிய கிரீசா. 37-38

31. பாதர்சேய் மாமனென பகர்ந்து நிதிதந்து
வரகுணற்கு சிவலோகம் வருவித்த ஈசா. 39-40

32. பாணன் விரகாளென பகர்ந்தெதிரி வாடி
நாணசுதி மீட்டிய நாதாந்த ரூபா. 41

33. பாணனுக்கு நிதியளிக்க பக்திமிகும் சேரன்
காண திருமுகமீந்த கைலாச நாதா. 42

34. பொற்பலகை பாணனுக்கு பொருந்திருக்க ஈந்து
கற்பினளை இசைவாதில் காத்த சிவை பாகா. 43-44

35. பன்றி சேய்களை காக்க பாலீந்து கூடல்
நின்றிசெயுமமைச்சரென நாட்டிய ஜல்பேசா. 45-46

36. கரிக்குருவிக்குபதேசம் கருணையுடன் செய்து
பெருநாரைக்கருளிய பிரணவப் பொருளே. 47-48

37. அரவாழி கொண்டு திருவாலவா யமைத்த
மரகத வல்லிமகிழ் மாமறை முதல்வா. 49

38. சுந்தரனென்றெழுதிய சுடுசரம் தாக்க
விந்தையுடன் சோழனை விரட்டிய தேவா. 50

39. கருணையுடன் பலகையைக் கவிவாணர்க்கீந்து
தருமிக்குப் பொற்கிழியைத் தந்தஉமை பாகா. 51-52

40. வாதபுரிகீரனை வாவியினின்றேற்றி
கோதிலாவிலக்கணத்தைக் கொடுப்பித்த நாதா. 53-54

41. கடைசங்கத்தார்களின் கலவரத்தைத்தீர்த்து
இடைக்காடர் மகிழுற இயற்றிய ஈசா. 55-56

42. கலைபிடிக்க வலைவீசி கன்னியை மணந்த
தலைவனே தயாபரா தர்மஸ்வரூபா. 57

43. பாதபத்மங்களை பணிசிரத்தில் சூட்டி
வாதவூரடிகளுக்கு வரமளித்த தேவா. 58

44. நரியைப்பரியாக்கியு னல்லடியர் போற்ற
பரியை நரியாக்கிய பார்வதி ரமணா. 59-60

45 மாதுதரும் பிட்டுக்கு மண்ணடியுந் தாங்கி
சூதுற்ற பாண்டியன் சுரந்தணித்த நாதா. 61-62

46. சம்மந்தர் வாதினால் சமணரை வென்று
அம்பிகை யகமகிழ ஆடிய பொற்பாதா. 63

85718

47. வணிகன் மனையாள் போற்ற வன்னிசிவலிங்கம்
கிணறுடன் வருவித்த கிரிஜை மகிழ்நேயா. 64

48. அறுபத்திநாலுகலை யாடல்பணி பூண்ட
வறுமையறக் காத்தருளும் வாமிமகிழ் நேயா.

49 அகத்திய ராதிபுரி அருச்சனைக்குகந்து
சுகம்விளைக்கு மீனாக்ஷி சுந்தரா போற்றி.